# அறிவித்தல்

## ஓய்வூதியத் திணைக்களத்தின் கணனி மென்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

ஓய்வூதியத் திணைக்களத்தின்,ஒப்பந்த அடிப்படையிலானகணனி மென்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கும் பொருத்தமான தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. ஆட்சேர்ப்பு முறை.**

ஓய்வூதியத் திணைக்களத்தால் நடாத்தப்படும் நுண்ணறிவு மதிப்பீடு மற்றும் தொழில்த்தகைமை தேர்வு ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளும் பெறு பேறுகளின் அடிப்படையிலேயே ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**2. தேவையான தகைமைகள்:**

**(I) கல்வித்தகைமைகள்**

(1)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தான அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்துபெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞான/ தகவல் தொழில் நுட்பப் பட்டம்.

**அல்லது**

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தான அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்துபெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞானத்தை/ தகவல் தொழில் நுட்பத்தை ஓர் பாடமாகக் கொண்ட பட்டம். (முழுமையான பட்டத்தில் குறைந்தது 1/3 கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில் நுட்பமாக இருத்தல் வேண்டும்).

**அத்துடன்**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்துபெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞான/ தகவல் தொழில் நுட்பப் பாடத்தில் பெற்ற பட்டப் பின்கற்கைப் பட்டம்.

**அல்லது**

(3) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்ஒன்றிலிருந்தான அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்துபெற்றுக்கொண்ட பட்டம்.

**அத்துடன்**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தான அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்துபெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞான/ தகவல் தொழில் நுட்பப் பாடத்தில் பெற்ற பட்டப் பின்கற்கைப் பட்டம்.

**(II) கணனி மென்பொருள் அபிவிருத்தித் துறையில்தொழில்சார் தகைமைகள் :**

துறை தொடர்பான தொழில்முறைத் தகுதிகளைக் கொண்டிருப்பது விசேட தொழில்சார் தகைமையாகக்கருதப்படும்.

**(III) அனுபவம்.**

பதவிக்குத் தொடர்புடைய துறையில் ஒரு சிறப்பு தகுதி கருதப்படுகிறது.

**(IV) தேக ஆரோக்கியம் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும், நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கு திடமான தேக ஆரோக்கியத்தையும், சிறந்த மனநிலையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**(V) ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்பிற்கான ஒவ்வொரு விடயம் தொடர்பிலான தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

**3. தொழிலுக்கு தேவையான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் :**

i. இந்தப் பதவி தற்காலிகமானது. ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில்ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**4. வயதெல்லை.**

விண்ணப்ப முடிவு திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**5. மாதாந்தக் கொடுப்பனவு.-**

மாதாந்தப் படியாக ரூபா 88,000+17,800 வழங்கப்படும்.

**6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல் திட்டம் கீழே தரப்பட்டுள்ளது:**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்** | **அதிகபட்சப் புள்ளிகள்** | **தேர்வுக்கான குறைந்த பட்சப் புள்ளிகள்** |
|---|---|---|
| **கல்வித் தகைமைகள்**<br>(பட்டப்பின் கற்கைப் பட்டம் - 10, பட்டப்பின் கற்கைப் பட்ட டிப்ளோமா - 05, மென் பொருள் அபிவிருத்தியில் தொழில் முறைச் சான்றிதழ்- 02) | 10 | பொருத்தமற்றது |
| **பதவியில் இத் துறை தொடர்பிலான அனுபவம்**<br>Javaஅல்லது Angular2 இல் மென்பொறியியல்<br>i. 01வருட அனுபவம் – 02புள்ளிகள் | 10 | |

| | | |
|---|---|---|
| ii. 1- 2 வருட அனுபவம் – 05புள்ளிகள்<br>iii. 2- 3 வருட அனுபவம் – 07புள்ளிகள்<br>iv. 3வருடத்திற்கும் மேலான அனுபவம் – 10புள்ளிகள் | | |
| **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**<br>(ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் 05 கேள்விகள் கேட்கப்படும். சரியான ஒவ்வொரு பதில்களுக்கும் 5 புள்ளிகள் வழங்கப்படும்.)<br>i. மென்பொருள் அபிவிருத்திக் கோட்பாடு.<br>ii. API முகாமைத்துவம்<br>iii. தரவுத்தள முகாமைத்துவத் முறைமை(Relational and non-Relational Data Base Management System)<br>iv. PHP/Java நிகழ்சித்திட்டம் மற்றும் வடிவமைப்பு<br>v. Angular2Front-End இல்அபிவிருத்தி திறன்கள். | 25 | |
| **நேர்முகப் பரீட்சையில் செயல்திறன்** | 05 | |
| **மொத்தம்** | 50 | |

கட்டமைக்கப்பட்டநேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொகுதி அபிவிருத்தி தொடர்பில் ஒரு கேள்விக்கொத்து வழங்கப்படும்.

6.1 விண்ணப்பதாரியால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் நுண்ணறிவு மதிப்பிட்டிற்கு பெற்றுக் கொள்ளும் உச்சப்புள்ளி ஒழுங்கிற்கேற்ப காணப்படும் வெற்றிடத்தின் மூன்று மடங்கானோர் தொழில் முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**தொழில்சார் தகைமைப் பரீட்சை :**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்** | **அதிகபட்சப் புள்ளிகள்** | **தேர்வுக்கான குறைந்த பட்சப் புள்ளிகள்** |
|---|---|---|
| a) மென் பொருள் அபிவிருத்தியில் தேர்ச்சி<br>b) API முகாமைத்துத்தில் தேர்ச்சி.<br>c. தரவுத்தள முகாமைத்துவத் முறைமையில் தேர்ச்சி(Relational and non-Relational Data Base Management System)<br>d. PHP/ Java நிகழ்சித்திட்டம் மற்றும் வடிவமைப்பில் தேர்ச்சி<br>e. Angular2 Front-Endஇன்அபிவிருத்தி திறன்களில் தேர்ச்சி. | 20 | 10 |
| மென்பொருள் தர உறுதிப்பாட்டில் தேர்ச்சி | 05 | 2.5 |
| மொத்தப் புள்ளிகள் | 25 | 12.5 |

நுண்ணறிவு மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப தொழில்முறைப் பரீட்சை ஆகியவற்றிற்கு விண்ணப்பதாரி பெற்றுக் கொள்ளும் உச்சப்புள்ளிகளின் ஒழுங்கிற்கமையக் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு அதிகாரியால் நியமனம் செய்யப்படும்.

7. **விண்ணப்பதாரியின் அடையாளம் :**

ஒவ்வொரு விடயங்களையும் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அனைத்துச் சான்றிதழ்கள் மற்றும் சான்றுகளின் மூலப் பிரதிகள் மற்றும் அவற்றின் முறையாகத் தயாரிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சைக்கு தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்ககீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு .

8. **விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முறை :**

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் “ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒப்பந்த அடிப்படையிலானகணனி மென்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான அட்சேர்ப்பு” எனத் தெளிவாகக் குறிப்பிட்டு, அத்தபால் உறையினுள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவமானது இடப்பட்டு 2025.03.17 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபாலில் பின்வருகின்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அத்திகதியின் பிற்பாடு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் நாயகம்.
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

விண்ணப்பத்தின் மாதிரி படிவத்தை, புள்ளிவழங்கும் திட்டம் மற்றும் மேலும் விவரங்களுக்கு http://www.pensions.gov.lkஐப் பார்வையிடவும்.

9. **தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்.-**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானவை அல்லது தவறானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது ஒதுக்குவதற்கோ ஓய்வூதியத் திணைக்களத்திற்கே உரிமை உள்ளது.**

Achami

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.
ஓய்வூதியத் திணைக்களம்,
கொழும்பு 10.

**Chaminda Hettiarachchi**
**Director General**
**Department of Pensions**
**Maligawatta - Colombo 10**

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஓய்வூதியத் திணைக்களத்தின் கணனி மென்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

| நேர்முகத் தேர்வுக்கான மொழி மூலம் | |
|---|---|

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

( பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.சிங்களம்-2/தமிழ்-3 )

---

1. முழுப்பெயர் :

2. நிரந்தர முகவரி:

3. பால் :

4. குடியியல் நிலை :

5. I. பிறந்த திகதி II. வயது :வருடம்............ மாதம்............ திகதி............

6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

7. தொலைபேசி இலக்கம்: நிரந்தர: கையடக்க:

   மின்னஞ்சல் முகவரி:

8. கோரப்பட்ட விண்ணபத்திற்கான இலக்கம் 02 இன் கீழ் பெற்றுள்ள பொருத்தமான ஒவ்வொரு தகமைகள் தொடர்பிலான தகவல்கள்:

| <u>தகைமை</u> | <u>பெற்ற நிறுவனம்</u> | <u>பெறப்பட்ட தேதி/காலம்</u> |
|---|---|---|
| **1. கல்வித் தகைமைகள்** | | |
| I ………………………….. | ……………………….. | ………………………….. |
| II…………………………. | ………………………. | ………………………….. |
| III…………………………. | ………………………. | ………………………….. |

2. தொழில்சார் தகைமைகள்

I…………………………… …………………….. …………………………..

II………………………… …………………….. …………………………..

III……………………….. …………………… …………………………..

3. அனுபவம் .

I…………………………… …………………… …………………………..

II………………………… …………………… …………………………..

III……………………….. …………………… …………………………..

4. ஆங்கில மொழிப் புலமை

I…………………………… …………………… …………………………..

II………………………… …………………… …………………………..

III……………………….. …………………… …………………………..

9. விண்ணப்பதாரியின் சான்றளிப்பு :

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவையும், சரியானவையுமென்று நான் வெளிப்படுத்துகின்றேன் அத்துடன் நேர்காணல் நடாத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட அனைத்து ஏற்பாடுகளுக்கும் நான் உட்பட்டுவேன் என்பதையும் நான் முழுமையாக அறிவேன் என்று அத்தாட்ச்சிப்படுத்துகிறேன்.

------------------------------------------

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :--------------.

**Marking Scheme for the Structured Interview:**

1) Additional Education qualification - maximum 10 marks
   a) Post Graduate Degree – 10 marks
   b) Post Graduate Diploma – 05 marks
   c) Professional Certificates on Software Development – 02 marks
      (Issued by an institution registered with the Tertiary and Vocational Education Commission) (TVEC) *Marks will be given only for the highest qualification

2) Experience in specified post: maximum 10 marks
   a) 1 year experience as Java or Angular2 Software engineer - 02 marks
   b) 1-2 years experience as Java or Angular2 Software engineer - 05 marks
   c) 2-3 years experience as Java or Angular2 Software engineer - 07 marks
   d) More than 3 years experience as Java or Angular2 Software engineer - 10 marks

3) Structured interview : maximum 25 marks
   (Five questions will be asked in below subject areas; 05 marks for each question)
   i. Concepts of Software Developments
   ii. API Management
   iii. Data Base Management Systems (Relational and non-Relational)
   iv. PHP/Java programming and Designing
   v. Development skills in Angular2 Front-End

   The following criteria are used when assigning marks
   - Explain the concept – 02 marks
   - Explanation of using applications – 02 marks
   - Presenting correct answers – 01marks

4) Performance at the interview : 05 marks
   - Leadership skills – 02 marks
   - Communication skills – 02 marks
   - Personality – 01 marks

**Marking Scheme for the Professional Test:**

1) Software Development Skills : 25 marks
   i) Concepts of Software Developments
   ii) API Management
   iii) Data Base Management Systems (Relational and non-Relational)
   iv) PHP/Java programming and Designing
   v) Development skills in Angular2 Front-End

2) Software Quality Assurance Best practices (05 marks)